இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 16 – ஞாயிற்றுக்கிழமை 30 மார்ச் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 229 : Thiruvalluvar Year - 2056 - Panguni 16 - Sunday 30 March 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## நூறு நாள் வேலைத் திட்டம்: நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அராஜக அரசைக் கண்டித்து

# தமிழ்நாடெங்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பை ஏற்று லட்சக்கணக்கில் கழகத் தோழர்கள் திரண்டனர்!

**சென்னை, மார்ச் 30 -**

**நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கில் கழகத்தினர் பங்கேற்றனர்.**

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.3.2025 சனிக்கிழமை அன்று "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்திருந்தார்.

இதனையொட்டி தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 09.03.2025 அன்று காலை, சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, "தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை ஒன்றிய அரசிடம் பெற வேண்டும்" என்றும்; அத்துடன் 'ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது' குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, "ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலைவாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று (29.03.2025 - சனிக்கிழமை) தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில் லட்சக்கணக்கில் கழகத் தோழர்களும், ஏழை மக்களும் பங்கேற்றனர்.

---

## நம் நகரங்கள் உலக அளவில் போட்டி போடக்கூடியவைகளாகத் திகழப் பாடுபடுவோம்!

# ஒட்டுமொத்த வளர்ச்சியே எங்கள் இலக்கு!

## இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, மார்ச் 30 -**

**நம் நகரங்கள் உலகளவில் போட்டி போடக்கூடியவைகளாகத் திகழ பாடுபடுவோம் என்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியே எங்கள் இலக்கு என்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.3.2025) சென்னையில் நடைபெற்ற, இந்திய தொழில் கூட்டமைப்பின் இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-**

CII நடத்தும் இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்திய தொழில் கூட்டாண்மை தென்னிந்திய மாநாடு 2025இல் "இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழலை உருவாக்குதல்" என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் நான் அடைகிறேன்.

தமிழ்நாடு அரசும் இந்திய தொழில் கூட்டமைப்பும் பல ஆண்டு காலமாக இணைந்து செயல்பட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், CII கூட்டமைப்பு, தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு செய்து வரும் முயற்சிகளுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் நந்தினி ரங்கசாமி அவர்கள் இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்னிந்திய தலைவர் உள்ளிட்ட பல பொறுப்புகளில் நேர்மையாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவர் தலைவராக இருக்கக்கூடிய ஜி.ஆர். ஜி.கல்விக் குழுமத்தைச் சேர்ந்த பி.எஸ். ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி தான் தமிழ்நாட்டிலேயே சிறந்த கல்லூரியாக கடந்த ஆண்டு N.I.R.F. தரவரிசையில் இடம் பெற்றிருக்கிறது என்பதே அவரின் தலைமைப் பண்பை எடுத்துக்காட்டுகிறது.

தொழில்துறை, பெண்கல்வி, மனிதநேய செயல்பாடுகள் என்று பல துறைகளில் சிறந்து விளங்கி தமிழ்நாட்டில் இருக்கும் பெண்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார் திருமதி. நந்தினி ரங்கசாமி அவர்கள். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

### இந்திய வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு!

இந்தியாவின் வளர்ச்சியில், தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே, இரண்டாவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியாவின்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.3.2025) சென்னையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்திய நகரங்களில் வாழக்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டல உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் உட்பட பல்வேறு தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உற்பத்தித் துறை மொத்த மதிப்புக் கூட்டலில், தமிழ்நாடு 12.11 விழுக்காடு பங்களிப்பு செய்கிறது. கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு 8 விழுக்காட்டுக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி கண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்தன்மை வாய்ந்தது. இந்த வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், 2030ஆம் ஆண்டுக்குள், தமிழ்நாட்டை

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்